# 2 சாமுவேல்

**தாழ்மையும் இராஜ்ஜியமும்**

**இராஜ்ஜியத்திற்கான திறவுகோல்.**

*கர்த்தரால் ஆணையிடப்பட்ட ஆட்சியைச் செய்வதற்காக தாவீது தெரிவு செய்யப்பட்டு அபிஷேகம்செய்யப்பட்டவராய் முதன்முதலில் வேதாகமத்தில் 1 சாமுவேல் 16ம் அதிகாரத்தில் தோன்றுகின்றார்.* ( 1, 3, 13).*கர்த்தருடைய சொந்த இருதயத்திற்கு ஏற்றவராய் தாவீது, கர்த்தருடன் தொடர்புள்ளவராய்,செழிப்பாய் காணப்படுகின்றார்.* (1சாமு 13:14)*தாவீதின் அடையாளமாக இருப்பது அவரின் தாழ்மையேயாகும்.கர்த்தரால் தாவீது விரும்பப்பட்டவனாகவிருந்தான், ஆனால் சவுலின் மீது விருப்பமுடையவாயும் இருந்தான்* (1சாமு 24:10)*அத்துடன் கர்த்தரால் அபிஷேகம்பண்ணப்பட்டவரை கனம்பண்ணினான். மரணமடைந்த சவுலை தாவீது கனம்பண்ணினான். அவன்மீதுள்ள கோபத்தை அவன் பாராட்டவில்லை., அவருடைய சிங்காசனத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று நினைக்கவில்லை.* (2சாமு1:9:1-13)தாவீது தன்னுடைய எதிரிகளால் தக்கப்பட்டபோதிலும், கர்த்தருடைய தீர்ப்பு வரும்வரைக்கும் காத்திருந்தான், அத்துடன் அவன் தன்னை எப்போதும் உயர்த்தவில்லை. கர்த்தருடைய நேரத்திற்காகவும் வழிநடத்தலுக்காகவும் தாவீது காத்திருந்தான்.(5:22-25,). அவன் கர்த்தர்மீது கொண்ட நேசத்தினால், எல்லாவற்றிற்கும் மேலாக அவரை ஆராதிப்பதையே விரும்பினான். உடன்படிக்கைப் பெட்டி திரும்ப வந்தபோது கர்த்தரைத் துதிப்பதையும் குழந்தையைப் போல் செயற்பட்டதையும், தன்னைத் தாழ்த்தியதையும் பார்க்க முடிகிறது. (6:13-23), மேசியா தாவீதின் வம்சத்தில் பிறப்பார் என்ற உடன்படிக்கை செயப்பட்ட நேரத்திலும் அவர் தன்னை தாழ்த்தியவராகவேயிருந்தார். (7:1-29). தன்னுடைய மிகக் கடுமையான தோல்வியிலும் தாவீது தாழ்மையுடன் கடிந்து கொள்ளலை ஏற்றுக் கொண்டான், கர்த்தரைத் தேடினான், தீர்க்கதரிசியின் கடிந்து கொள்ளலையும், கர்த்தருடைய நியாயப்பிரமாணங்களையும் ஏற்றுக் கொண்டான்.(சங் 51) மேலும் தன்னுடைய சொந்த மகனால் தொல்லைப்படுத்தப்பட்ட போதிலும், கொலைகாரர்கள் தாக்கியபோதிலும்,

தாவீது அவர்களுடன் மோதாமல் கர்த்தரிடம் நீதிகிடைக்கும்படி மன்றாடினான், (15-16) இதுதான் தேசத்தை ஆளுகைசெய்பவர்களின் இருதயமாகும்; கர்த்தரை நேசிப்பதும் மக்களுக்கு சேவை செய்வதுமான இருதயம், கர்த்தரே தன்னைத் தெரிவு செய்துள்ளார் என்ற போதிலும் தன்னை உயர்தாத இருதயம் தாவீதுக்கிருந்தது.

தாவீதினுடைய கிருபையுள்ள தாழ்மையை விளங்கப்படுத்தும் போது அவருடைய தகமைக்கான வளங்களை நாம் கவனிப்போம். கர்த்தருக்கு முன்பாக உடைந்த உள்ளத்தோடு இருந்ததற்கான காரணங்கள்-1) தன்னுடைய சொந்த வாழ்வில் ஏற்பட்ட தோல்வியினால் மனச்சாட்சியில் குத்தப்படல் 2) சர்வவல்ல கர்த்தருடன் பேசும்போது ஏற்பட்ட உணர்வலைகள். அனுதினமும் கர்த்தருடன் உறவாடி திருப்திகரமான கர்த்தருடைய பரிசுத்தத்திற்குள்ளாதல். ஆரதனை செய்வதை தன்னுடைய வாழ்வில் வழக்கமாகக் கொண்டிருந்தபடியால், அவனில் தாழ்மைக்கான செயற்பாடுகள் வளர்ச்சியடைந்தன. இப்படியான தெய்வீகக் குணங்கள் உருவாக வேண்டு மானால், தாவீதைப் போல் ஆராதிக்க கற்றுக் கொள்ளல் வேண்டும். இயற்கை ஆற்றலுக்கு அப்பாற்பட்ட, கலப்பற்ற இயல்புடைய, ஆழமானதும் வெளிப் படையானதுமான கர்த்தரைத் துதிப்பதாகும். தாவீதின் துதிகள் எப்பொழுதும் வெளிப்படையானதும், சிறுபிள்ளைத் தனமானதாகவும் இருந்தது.

**பிரதான திறவு கோல்: குமாரன் வெளிப்படுத்தப்படல்**

தாவீதும், அவருடைய ஆட்சியும் சுட்டிக்காட்டுவது மேசியாவின் வருகையையாகும். 7ம் அதிகாரம் விஷேடமாக வரப்போகும் ராஜாவைக் குறித்துப் பேசுகின்றது. உடன்படிக்கைப் பெட்டியை வைப்பதற்காக தாவீது தீட்டிய திட்டத்தை கர்த்தர் தடுத்து நிறுத்துகின்றார். கர்த்தர் தாவீதினால் தனக்கு ஒரு வீட்டைக்கட்ட முடியாது என்பதை விளக்கிக் கூறுகின்றார். கர்த்தர் தாவீதிற்கு ஓர் வீட்டைக்கட்டுகின்றார், அதாவது என்றும் மாறாத ஒரு வழியை வைக்கின்றார், அதுதான் மேசியா, அவரின் பரம்பரையில் உதிப்பார் என்பதேயாகும்.

இஸ்ரவேலில் தாவீதிற்கு விரோதமாக எழும்பிய சகல எதிரிகளையும் மேற் கொண்டார், அத்துடன் கர்த்தருக்குமுன்பாக மிகவும் தாழ்மையாகவிருந்தார். தனக்குமுன் காணப்பட்ட சகல தீர்க்கதரிசிகள் முன்பாகவும், ஆசாரியர்கள்

முன்பாகவும், ராஜாக்கள் முன்பாகவும் கர்த்தரின் வீட்டிற்காக மிகவும் வைராக்கியமாகவிருந்தார், தாவீது, ஈசாயின் அடியில் வந்த இயேசுக் கிறிஸ்த்துவிற்கு முன்னோடியானவர்.

**திறவுகோல் வார்த்தை: தாவீது**

*2ம் சாமுவேல் புத்தகத்தின் சிறப்பியல்பைக் காண்பிப்பவர் **தாவீதாகும்,** அவரைச் சுற்றியே முழுப்புத்தகமும் எழுதப்பட்டுள்ளது.*

**திறவு கோல் வசனங்கள்**: 2 சாமுவேல் 7:12-13;

- 2சாமு7:12 உன்நாட்கள் நிறைவேறி, நீ உன்பிதாக்களோடே நித்திரை பண்ணும்போது, நான் உனக்குப் பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப் படுத்துவேன்.(2சாமு7:13) அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான்.
  அவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்.
- 2சாமு 22:21 கர்த்தர் என் நீதிக்குத்தக்கதாக எனக்குப்பதில் அளித்தார்; என் கைகளின் சுத்தத்திற்குத்தக்கதாக எனக்குச் சரிக்கட்டினார்.

**திறவு கோல் அதிகாரம்: 2 சாமுவேல் 11**

*இரண்டாம் சாமுவேல் புத்தகத்தின் மையப்பகுதி பதினோராம் அதிகாரமாகும்... இந்த அதிகாரத்தில் தாவீதின் கொடிய பாவமாகிய பத்சேபானினதும் அவளது கணவனைப்பற்றியும் கூறப்படுகின்றது. கர்த்தரால் அபிஷேகம் பெற்றவரைத் தண்டிப்பதற்காக ராஜ்ஜியமும், ஆசீர்வாதங்களும் அவரை விட்டு அகற்றப்படுவதைப் பார்க்கிறோம்.*

***திறவு கோல் மனிதர்கள்:**-தாவீது, பத்சேபாள், நாத்தான்வேல், அப்சலோம், யோவாப், அம்மோன், அகித்தாப்போல்.*

**கர்த்தருடைய ஆவியின் கிரியைகள்.**

யோவான் 16 8 இல் ஆவியின் கிரியையை இயேசு காண்பிக்கின்றார். "அவர்வந்து, பாவத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்துஉணர்த்துவார்." 2 சாமுவேல் புத்தகத்தில் பரிசுத்த ஆவியின் கிரிகைகளை எம்மால் தெளிவாகக் காணமுடியும்.

ஆசாரியர்களுக்கூடாக பரிசுத்த ஆவியின் கிரிகைகளைப் பார்க்கிறோம் . தாவீது “ கர்த்தரிடத்தில் விசாரிக்கும் போது” ஆசாரியனுக்கூடாகவும், ஏபோத்திற்கூடாகவும் அவர் ஆலோசனைக் கர்த்தராக கிரியை செய்கிற தைப்பார்க்கிறோம். நாத்தான்வேல் தாவீதினிடத்தில் வந்து பத்சேபாளுடன் செய்த பாவத்தையும் அவளது கணவனைக் கொலை செய்ததையும் கூறிய போது அவன் அதனை ஏற்றுக் கொண்டான். தாவீதின் பாவம் மூடப்படாத் தாய் இருந்தது, நீதி வேண்டப்பட்டது, நியாயத்தீர்ப்பும் கூறப்பட்டது. இந்த சம்பவங்கள் பரிசுத்த ஆவியினுடைய சிறந்த செயற்பாட்டை எடுத்துக் காண்பிக்கின்றன.

**2 சாமுவேல் அறிமுகம்.**

**எழுதியவர்;-** 1,2, சாமுவேல் புத்தகங்களாக இருப்பவை முன்பு ஒரு புத்தகமாகவே இருந்தது. உண்மையான எழுத்தாளர் யார் என்று தெரியாது. இந்தப் புத்தகத்தில் சாமுவேல் குறிப்பிடத்தக்க அதிகாரங்களை எழுதியுள்ளார். நாத்தான்வேலும், காத்தும் மிகுதியை எழுதியுள்ளார்கள். ஆசாரியனாகிய அபியத்தராகவுமிருக்கலாம்.


**காலம்:- 930 கி.மு**

**உள்ளடக்கம்:-** இரண்டாம் சாமுவேல் புத்தகம் தாவீது அரசபொறுப்பு எடுப்பதைப்பற்றியும் அவரது 40 வருட அரசாட்சிபற்றியும் கூறுகின்றது. தாவீதைக் காண்பிப்பதோ இப்புத்தகத்தின் நோக்கமாகும். இப்புத்தகம் சவுலுடையதும் அவரது மகனாகிய யோனத்தானுடைய மரணத்துடனும் ஆரம்பமாகின்றது. தனது சொந்த கோத்திரமாகிய யூதாவின் மீது தாவீது அரசனாக அபிஷேகம் பண்ணப்பட்டான். சவுலுடைய மகனாகிய யோனத்தானுடையதும், சவுலுடைய இராணுவ அதிகாரியாகிய அப்னோருடையதுமான கதைகள் அங்கு காணப்படுகின்றன. அவர்களின் பிரச்சனைகள் அடக்கப்பட்டது, இதன் சுருக்கம் தேசம் தாவீதுவினால் ஒற்றுமைப்படுத்த 7 ½ வருடங்கள் சென்றன, “சவுலின் குடும்பத்துக்கும் தாவீதின் குடும்பத்துக்கும் நெடுநாள் யுத்தம் நடந்தது; தாவீது வர வரப்பலத்தான்; சவுலின் குடும்பத்தாரோ வரவரப் பலவீனப்பட்டுப் போனார்கள்”. (3:1). பெலிஸ்தர்களினால் திருப்பிவிடப்பட்ட உடன்படிக்கைப் பெட்டியானது அபினதாப் வீட்டில் இருந்தது, அதைத் திருப்பிக் கொண்டுவந்ததனால் தேசத்தில் இராச்சிய ஒற்றுமையையும், சமயசம்பந்தமான ஒற்றுமையையும் தாவீது கொண்டுவந்தான். (6:1-7:1).

வரப்போகிற ராஜாவாக மேசியா வருவார் என்பதே கட்டுரைப் பொருளாகும், அதாவது 7 கர்த்தர் நித்திய உடன்படிக்கையாக தாவீதின் ராஜ்ஜியத்தை உருவாக்குவார். ”உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலை பெற்றிருக்கும்” (7:16).தாவீது தனது எதிரிகள் யாவரையும் தோல்வியடையச் செய்தான், இதனால் ராஜ்ஜியம் பெலனடைந்தது, தேசத்தில் ஆசீர்வாதம் பெருகத் தொடங்கியது. எப்படியோ தாவீது பச்சேபாளுடைய பாவத்திலும் அவளது கணவனாகி உரியாவின்  பாவத்திலும் அகப்பட்டுக் கொண்டான். தாவீது நாத்தான்வேலினால் உணர்த்தப்பட்ட போது மனம் திரும்பி மன்னிப்புக் கேட்டபோதிலும், பாவத்தின் பலனாக அவனுக்கு எதிராக “பட்டயம் என்றைக்கும் உன்வீட்டை விட்டு விலகாதிருக்கும்”. என்று தீர்க்கதரிசியால் கூறப்பட்டது தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. (12:10). தாவீதின் மகனாகிய அப்சலோம், தகப்பனுக்கு எதிராக யுத்தம் செய்யப்புறப்பட்டான், தாவீது எருசலேமை விட்டு ஓடவேண்டி நேரிட்டது, விளைவு யோவாப் அவனைக் கொலை செய்தான். பல  போராட்டங்களுக்கு மத்தியில் மீண்டும் தாவீது எருசலேமில்  அரசனாகினான்.

**வாழ்க்கைப் பிரயோகம்.**

சரித்திரத்தில் கர்த்தர் செயற்படுகிறார் என்பதை இந்தப் புத்தகத்தினூடாக காணமுடிகின்றது.மனிதர்கள் பலவீனமுள்ளவர்களாய் பாவிகளாய் இருந்த போதிலும்,சில வேளைகளில் தண்டிக்கப்பட்ட போதிலும், இப்போதும் கர்த்தர் தன்னுடை மீட்பின் செயற்பாட்டை இராஜாதி ராஜனும் ,மேசியாவுமாகிய கிறிஸ்துவிற்குள்ளாகச் செய்து கொண்டேயிருக்கிறார். (வெளி22:16.) சபைகளில் இவைகளை உங்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்படிக்கு இயேசுவாகிய நான் என்தூதனை அனுப்பினேன். **நான் தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன் என்றார்**.



இராஜ்ஜியத்தில் குழப்பங்கள்

13:37–24:25

~~அரசியல் வெற்றி 11 5:25 7 வருடங்கள்~~ 33 வருடங்கள்

**2.சாமுவேல் சுருக்கம்**

**I. தாவீதின் வெற்றிகள்1:1-10:19.**

**A.** அரசியல் வெற்றிகள்.**(1:1-5:25).**

*1.* ***எபிரோனில் தாவீதின் ஆட்சி****(1:1-4:12).* ஆரம்பத்தில் தாவீது தன்னுடைய சொந்த கோத்திரத்திரத்தினரால் அரசனாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். மற்றவர்கள் சவுலுனுடைய மிகுதியான மகனாகிய இஸ்போசத்திற்கு விசுவாசமாயிருந்தார்கள்.

**சவுலுடைய மரணச் செய்தி** (1:1-27). சவலுக்காகவும்,யோனத்தானுக்காகவுத் தாவீது துக்கம் கொண்டாடினார். அவரைத் துக்கப்படுத்தியோர் மத்தியில் பயத்தை ஏற்படுத்தியது. (19-27). தன்னை கொலை செய்ய பல தடவை முயற்சித்து, தனது வளர்ச்சிக்கு தடையாக இருந்த மனிதன் மரித்து விட்டதை நினைத்து மகிழாமல் துக்கம் கொண்டாடினான். தாவீது சத்துருவை சினேகிக்கிறவராக இருந்தார்.

**தாவீது யூதாவின் ராஜாவாக அபஷேகம் செய்யப்படல்**. (2:1-7). தாவீது இந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவரானதால் அவரை யாவரும் ஏற்றுக் கொண்டார்கள். (2:1) நெருக்கமான துன்பமான வேளையில் மட்டுமல்ல நல்லநிலையில் இருக்கும் போதும் தாவீது கர்த்தரை கேட்டு நடக்க வாளப்பழகிக் கொண்டார்.
தாவீது யூதாவின் பட்டணங்களில் போயிருக்கலாமா என்று கேட்டதற்கு கர்த்தர் எப்ரோனுக்கு போ என்றார். 2:4 யூத மக்களால் அபிஷேகம் பண்ணப்படல்.

**சவுல் குடும்பத்திற்கும் தாவீதிற்குமிடையில் யுத்தம்**(2:1-3:5). அப்னேர், சவுல் படை அதிகாரி, இஸ்போசேத்தின் முடிசூட்டலை பின்தள்ளிவைத்தார்.( 2சாமு 2:10,5:5). 3: 6-11 அப்னோரின் தகாத உறவை சுட்டிக்காட்டும் இஸ்போகேத் இஸ்ரவேலரை தாவீதிடம் ஒப்படைக்க சம்மதம் கேட்கிறார் அப்னோர்.

3:26-27 யோவாய் தனது சகோதரன் ஆசகோலைக் கொலை செய்வதற்கு பழிவாங்க அப்னோரை அழைத்து வஞ்சகமாக கொலை செய்கிறான்.(28-29) இந்தக் கொலைக்காக யோவாப்பைக் கண்டிக்கிறான். பின்னர் தண்டனையை மகனிடம் கூறிவைக்கிறார். 4:4 யோனத்தனின் மகன் மேவிபோசேத் உயிரோடிருப்பதை கூறுகின்றது.

*2. எருசலேமில் தாவீதின் ஆட்சிசெய்தல் (5:1-25).*

**தாவீது முடிசூட்டப்படல்**(5:1-5).. இணைந்த இராஜ்ஜியத்திற்கு ராஜாவாக தாவீது ஏற்றுக் கொள்ளப்படல். இணைந்த இராஜ்ஜியத்தை **33வருடம்** ஆட்சி செய்தார்.

எருசலேமைப் பிடித்தல் (5:6-9). யாத்திரகாமப்புத்தகத்திற்கு முன்பிருந்தே எருசலேம், எபூசியரின் எல்லையாக இருந்தது.(யோசு 18:16, 28) இதற்கு எதிராக தாவீது யுத்தம்செய்தான்.

**B. தாவீதின் ஆவிக்குரிய வெற்றிகள்.(6:1-7:29).**

*1.* ***உடன்படிக்கைப் பொட்டியை கொண்டுவருதல்*** *(6:1-23).* தாவீது உடன்படிக்கைப் பெட்டியைத் திரும்ப எருசலேமுக்கு கொண்டு வருவதற்குத் தீர்மானிக்கின்றார். உடன்படிக்கைப் பெட்டியைப் பாதுகாப்பாகக் கொண்டு வருவதற்கு முப்பதாயிரம் இராணுவ வீரர்களைப் பயன்படுத்தினார். இதைக் கொண்டு செல்வதற்காக அதனை ஒரு வண்டியில் வைக்கின்றார். அதனைக் கொண்டுவரும் வழியில் அதனைச் சரிசெய்வதற்காக தாவீதின் உதவியாளர் ஒருவர் கையை நீட்டி அதனைப்பிடிக்க முயன்றார்,அதனால், அவர் அடிவாங்கி மரித்தார். லேவியர் சுமந்து வரவேண்டியதை இரதத்தில் ஏற்றி வந்ததாலும் ஊசா தொட்டதாலும் மரித்தான். தாவீது பயந்து சம்பவம் நடந்த இடத்தில் உடன்படிக்கைப் பெட்டியை விட்டு ஓடிவந்தார்கள். (11-15). தாவீது பயமடைந்தது மட்டுமல்ல, அந்தச் சம்பவம் கர்த்தரின் பரிசுத்தத்தையும், மாட்சிமையையும் தெளிவுபடுத்திற்று. அதனால் தாவீது உடன்படிக்கைப் பெட்டியை எவ்வாறு கொண்டு செல்லல் வேண்டும் என்பதற்கான மேசேயின் நியாயப் பிரமாணத்தைக் தேடிக் கண்டுபிடித்தான். (எண்ண1:47-52) தாவீது பயத்தைப் போக்கி, ஆசாரியர்களுடனும், லேவியர்களுடனும் சந்தோஷத்தோடு ஆடிப்பாடி உடன்படிக்கைப் பெட்டியைக் எருசலேமிற்கு கொண்டுவந்தான். முதலாம் நாளாகமப்புத்தகத்தில் இதைக்குறித்ததான விபரங்களைக் காணலாம்.(11-5) 1நாள 15:11 பின்பு தாவீது ஆசாரியராகிய சாதோக்கையும், அபியத்தாரையும், லேவியராகிய ஊரியேல், அசாயா, யோவேல், செமாயா,

எலியேல், அம்மினதாப் என்பவர்களையும் அழைத்து, 1நாள 15:12அவர்களை நோக்கி: லேவியரில் நீங்கள் பிதாக்களுடைய சந்ததிகளின் தலைவர், நீங்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் பெட்டியை கொண்டுவருவதற்கு நான் ஆயத்தம் பண்ணின ஸ்தலத்திற்குக் கொண்டுவரும்படி, உங்களையும் உங்கள் சகோ தரரையும் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள். 1நாள 15:13 முதலில் நீங்கள் அதைச் சுமக்காதபடியினாலும், நாம் நம்முடைய தேவனாகிய கர்த்தரை நியாயமானபடியே தேடாதேபோனபடியினாலும், அவர் நமக்குள்ளே அடிவிழப் பண்ணினார் என்றான்.1நாள 15:14அப்படியே ஆசாரியரும் லேவியரும் இஸ்ர வேலின் தேவனாகிய கர்த்தரின் பெட்டியைக் கொண்டுவரத் தங்களைச் சுத்தம் பண்ணிக் கொண்டார்கள். 1நாள 15:15பின்பு லேவிபுத்திரர் கர்த்தருடைய வார்த் தையின்படியே, மோசே கற்பித்தபிரகாரம் தேவனுடைய பெட்டியை அதின் தண்டுகளினாலே தங்கள் தோள்மேல் எடுத்துக் கொண்டு வந்தார்கள். தாவீது ஆராதனையை முன்நடத்திச் சென்றான்.(6:12-23). எருசலேமிற்குள் உடன்ப டிக்கைப் பெட்டி நுழைந்த நேரம்முதல் தாவீது பெட்டிக்கு முன்பாக வழி நெடுகிலும் ஆடிப்பாடிக் கொண்டே வந்தான். அவனுடைய மனைவியாகிய சவுலின் மகளாகிய மீகாள் தாவீது நடனமாடுவதைக்கண்டு வெகுவாக விசனமடைந்தாள்

*2.* ***தாவீதுடன் கர்த்தர் செய்த உடன்படிக்கை*** *(7:1-29).* கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி கூடாரத்தில் இருக்கும் போது நான் எப்படி மாளிகையில் தங்குவது என்று தாவீது மனம்வருந்தினார். கர்த்தர் தன்னை எவ்வளவு ஆசீர்வாதமாய் வைத்திருக்கிறார் என்பதை உணர்ந்தவராயிருந்தார். அதனால் தாவீது கர்த்தருக்கு ஒரு ஆலயத்தைக்கட்ட தீர்மானித்தான். தீர்க்கதரிசி நாத்தான்வேலுக்கூடாக ஒரு செய்தியைக் கர்த்தர் அனுப்பினார். தாவீது கர்த்தருக்கு வீடு கட்டுவதற்குப் பதிலாக, கர்த்தர் தாவீதுக்கு வீடுகட்டுவார் என்பதேயாகும். இஸ்ரவேலின் சிங்காசனம் என்றென்னும் தாவீதினுடைய குடும்பத்தினரிடமே இருக்கும்.

**தாவீதின் பதில் விண்ணப்பம்.**(2சாமு 7:18-29). 2சாமு 7:18 அப்பொழுது தாவீது ராஜா உட்பிரவேசித்து, கர்த்தருடைய சமுகத்திலிருந்து. கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு, நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்? 2சாமு 7:19கர்த்தராகிய ஆண்டவரே, இது இன்னும் உம்முடைய பார்வைக்குக் கொஞ்சகாரியமாயிருக்கிறது என்று கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற தேவரீர் உம்முடைய அடியானுடைய வீட்டைக்குறித்து, வெகு தூரமாயிருக்கும் காலத்துச் செய்தியை மனுஷர்

முறைமையாய்ச் சொன்னீரே. 2சாமு 7:20 இனி தாவீது உம்மிடத்தில் சொல்ல வேண்டியது என்ன? கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நீர் உமது அடியானை அறிவீர். 2சாமு 7:21 உம்முடைய வாக்குத்தத்தத்தினிமித்தமும், உம்முடைய சித்தத்தின்படியேயும், இந்தப் பெரிய காரியங்களையெல்லாம் உமது அடியானுக்கு அறிவிக்கும்படிக்குத் தயவுசெய்தீர். 2சாமு7:22 ஆகையால் தேவனாகிய கர்த்தரே, நீர் பெரியவர் என்று விளங்குகிறது. நாங்கள் எங்கள் காதுகளாலே கேட்ட சகல காரியங்களின்படியும், தேவரீருக்குநிகரானவர் இல்லை; உம்மைத் தவிர வேறே தேவனும் இல்லை. 2சாமு7:23உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு நிகரான ஜனமும் உண்டோ? பூலோகத்து ஜாதிகளில் இந்த ஒரே ஜாதியைத் தேவன் தமக்கு ஜனமாக மீட்கிறதற்கும், தமக்குக் கீர்த்தி விளங்கப்பண்ணுகிறதற்கும் ஏற்பட்டாரே; தேவரீர் எகிப்திலிருந்து மீட்டுக் கொண்டுவந்த உம்முடைய ஜனத்திற்கு முன்பாகப் பயங்கரமான பெரிய காரியங்களை நடத்தி, உம்முடைய தேசத்திற்கும், அதிலிருந்த ஜாதிகளுக்கும், அவர்கள் தேவர்களுக்கும், உமதுமகிமையை விளங்கச் செய்து, 2சாமு 7:24 உம் முடைய ஜனமாகிய இஸ்ரவேலர் என்றைக்கும் உம்முடைய ஜனமாயிருப்பதற்கு, அவர்களைத் திடப்படுத்தி, கர்த்தராகிய நீர் தாமே அவர்களுக்குத் தேவனானீர். 2சாமு 7:25இப்போதும் தேவனாகிய கர்த்தாவே, நீர் உமது அடியானையும் அவன் வீட்டையும் குறித்துச் சொன்ன வார்த்தையை என்றென்றைக்கும் நிலைவரப்படுத்த, தேவரீர் சொன்னபடியே செய்தருளும். 2சாமு 7:26 அப்படியே சேனைகளின் கர்த்தர் இஸ்ரவேலின் மேல் தேவனானவர் என்றுசொல்லி, உம்முடைய நாமம் என்றென்றைக்கும் மகிமைப்படுவதாக; உமது அடியானாகிய தாவீதின் வீடு உமக்கு முன்பாக நிலைநிற்பதாக. 2சாமு7:27உனக்கு வீடுகட்டுவேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தராயிருக்கிற நீர் உமது அடியானின் செவிக்கு வெளிப்படுத்தினீர். ஆகையால் உம்மை நோக்கி இந்த விண்ணப்பத்தைச் செய்ய உமது அடியானுக்கு மனத்தைரியம் கிடைத்தது. 2சாமு 7:28 இப்போதும் கர்த்தராகிய ஆண்டவரே, நீரேதேவன். உம்முடைய வார்த்தைகள் சத்தியம். தேவரீர் உமது அடியானுக்கு இந்த நல்விசேஷங்களை வாக்குத்தத்தம் பண்ணினீர். 2சாமு 7:29இப்போதும் உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும். கர்த்தரான ஆண்டவராகிய தேவரீர் அதைச் சொன்னீர், உம்முடைய ஆசீர்வாதத்தினாலே உமது அடியானின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக என்றான்.

C. தாவீதின் யுத்த வெற்றிகள்.**(8:1-10:19).**

*1. எதிரிகளை வெற்றி கொள்ளல் (8:1-12).*

*2.* ***தாவீதின் நீதியான அரசாட்சி.*** *(8:13-9:13).* தாவீது வல்லமையுள்ள யுத்தவீரரை உருவாக்கினார் அத்துடன், இஸ்ரவேலில் ஆராதனையையும் ஆரம்பித்தார். அவர் தனது மத்திய அரசில், வரிவசூலித்தர், பண்டகசாலைகளை உருவாக்கல், விவசாயச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல். என்பவற்றை ஏற்பாடுசெய்தார் (8:15-18).8:14 தாவீது போன இடத்திலெல்லாம் கர்த்தர் அவனை காப்பாற்றினார்.

**தாவீதுவும், மேவிபோசேத்தும்** 9:1-13). தாவீது தனது நண்பனாகிய யோனத்தானின் பரம்பரையில் யாராவது மீதியாக இருக்கிறார்களா என்று தேடிவந்தான். ஊனமான ஒரு பிள்ளை அவனுக்கு மிகுதியாக இருந்தது. அவன்பெயர் **மேவிபோசேத் ஆகும். தாவீது அவனுக்கு சவுலின் நிலங்களையெல்லாம் கொடுத்து அவனுக்கு மிகுந்த தயவு காண்பித்தான்.**

1. ***அம்மோனையும் சிரியாவையும் வெற்றி கொள்ளல்.****(10:1-19).*

**II. தாவீதினுடைய பாவங்கள். 11:1-27.**

A. **விபச்சாரப்பாவம் (11:1-5).** தாவீது பச்சேபாளிடம் செய்த மோசமான பாவம்

B. **உரியாவைக் கொலை செய்தல்.(11:6-27).**

*1.* ***உரியா தாவீதிற்கு உண்மையாகவிருத்தல்.*** *(11:6-13).*

*2.* ***உரியாவைக் கொலை செய்யம்படி தாவீது கட்டளையிடல்.*** *11:14-25.* தாவீது பச்சேபாளின் கணவனாகிய உரியாவை யுத்தகளத்தில் கொலைசெய்வதற்கு ஒழுங்கு செய்தல். இதுமிகவும் இழிவான செயலாகும்,உரியா தாவீதின் பழைய கூட்டாளியாவார். (1நாளா 11:41).

*3. தாவீதினதும்,பெத்சேபாளினதும் திருமணம்.(11:26-27).*

**III. தாவீதின் தொல்லைகள். 12:1-24:25.**

A. தாவீதின் வீட்டிலே தொல்லைகள்.**(12:1-13:36).**

*1.* ***நாத்தான் வேலின் தீர்க்கதரிசனம்*** *(12:1-14).*நாத்தான் வேல் தாவீதைச் சந்தித்துப் பேசுவதற்கு அனுப்பப்பட்டார். தாவீது உடனடியாக குற்றத்தை அறிக்கை செய்து கர்த்தருக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தினான். அரசன் என்றும் பாராது தவறுகளை சுட்டிக்காட்டிய நாத்தான்வேல்.

*2.* ***தாவீதின் மகனின் மரணம்****.(12:15-25).*

*3.* ***தாவீதின் மேல் யோவாப் காண்பித்த நம்பிக்கை*** *(12:26-31).* 2சாமு 12:26 அதற்குள்ளே யோவாப் அம்மோன் புத்திரருடைய ரப்பா பட்டணத்தின் மேல்யுத்தம் பண்ணி, ராஜதானியைப் பிடித்து, 2சாமு 12:27 தாவீதினிடத்தில் ஆள் அனுப்பி, நான் ரப்பாவின் மேல்யுத்தம் பண்ணி, தண்ணீர் ஓரமான பட்டணத்தைப் பிடித்துக் கொண்டேன். 2சாமு 12:28 நான் பட்டணத்தைப் பிடிக்கிறதினால், என்பேர் வழங்காதபடிக்கு, நீர்மற்ற ஜனங்களைக் கூட்டிக் கொண்டுவந்து, பட்டணத்தை முற்றிக்கைபோட்டு, பிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். 2சாமு 12:29அப்படியே தாவீது ஜனங்களையெல்லாம் கூட்டிக்கொண்டு, ரப்பாவுக்குப் போய், அதின் மேல் யுத்தம்பண்ணி, அதைப்பிடித்தான். 2சாமு 12:30 அவர்களுடைய ராஜாவின் தலைமேலிருந்த கிரீடத்தை எடுத்துக் கொண்டான். அது ஒருதாலந்துநிறை பொன்னும், இரத்தினங்கள் பதித்ததுமாயிருந்தது. அது தாவீதினுடைய தலையில் வைக்கப்பட்டது. பட்டணத்திலிருந்து ஏராளமான பொருட்களைக் கொண்டுபோனான். 2சாமு 12:31 பின்பு அதிலிருந்த ஜனங்களை அவன் வெளியே கொண்டுபோய், அவர்களை வாள்களுக்கும், இரும்புப்பாரைக ளுக்கும், இரும்புக் கோடரிகளுக்கும் உட்படுத்தி, அவர்களைச் செங்கற்சூளையையும் கடக்கப் பண்ணினான். இப்படி அம்மோன் புத்திரரின் பட்டணங்களுக்கெல்லாம் செய்து, தாவீது எல்லா ஜனத்தோடுங்கூட எருசலேமுக்குத் திரும்பினான்.

*4.* ***தாவீதின் குடும்பத்தில் ஏற்பட்ட தகாத உறவு*** *(13:1-20)*தாவீதைப் போல , அனேகமானவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் செய்திருந்தார்கள்.அனேகமானவர்களுக்கு தங்கள் குடும்பத்தினரிடையே அதாவது ஒன்றுவிட்ட சகோதரர், சகோதரிகளிடத்தில் , முரண்பாடுகள் தோன்றின. ஒருமகனாகிய அம்மோன், தன்னுடைய ஒன்றுவிட்ட சகோதரியை கற்பழித்தான். தாவீது மகனைக் கண்டிக்கவுமில்லை, தாமருக்கு

பரிகாரமெதுவும் செய்யவில்லை. நாட்டை ஆண்ட தாவீது வீட்டை சரியாக கவனிக்கவில்லை.

*5* ***அப்சலோம் அம்மோனைக் கொலை செய்தல்****. (13:21-36).* தாமாரின் சகோதரன் அப்சலோம், அம்மேனைக் கொலைசெய்வித்து பழிவாங்கினான்.

**B. தாவீதின் ராந்ஜியத்தில் குழப்பம். (13:37-24:25).**

*1.* ***அப்சலோம் கலகம் செய்தல். (13:37-17:29).*** தெற்குகோத்திரத்தாரிடம் (இஸ்ரவேல்) தகப்பனை வேறுபிரிப்பதற்காக அப்சலோம் கிளர்சியாளர்களைத் தூண்டினான். தாவீதினுடைய பழைய உதவியாளர்களின் உதவியையும் இறுதியில் பெற்றுக் கொண்டான். தாவீது எருசலேமை விட்டு ஓடும்படி நிர்ப்பந்திக்கப்பட்டான். 15:13-37). தாவீது இவ்வாறு ஓடியதன் அனுபவங்களை சங்கீதம் 3, 4 என்பவைகளில் காணமுடிகின்றது. தாவீது அழுத அதே இடத்தில் தாவீதின் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் அழுதார் (லூக் 19:37,41-44).

தாவீதினுடைய எல்லா பழைய நண்பர்களும் தாவீதிற்கு எதிராகத் திரும்பவில்லை. தன்னுடைய ஆலோசகர் ஒருவரை அப்சலோமின் படைகளுக்குள் ஊடுருவ தாவீது ஏற்பாடு செய்தான். யூதாவிலுள்ள நம்பிக்கையான படையினர் அப்சலோமின் படையினரை சுற்றிவளைத்துப் போரிட்டுவெற்றி கொண்டது. (16:15-17:29). 17:14 அப்சலோமுக்கு அகித்தோப்பின் ஆலோசனையை காட்டிலும் ஊசாவின் ஆலோசனை சரியாகப்பட்டது.
17:23 அகித்தோப்பில் தூக்கில் தொங்கி மரித்தான். பழைய ஏற்பாட்டில் முதல் முதல் தூக்கில் தொங்கி மரித்த மனிதன் அகித்தோப்பில் இரண்டாவதாக புதிய ஏற்பாட்டில் யூதாஸ் காரியோத்து மரித்தான்.(மத் 27:5)

*2.* ***யோவாப் அப்சலோமை கொலை செய்தல்.*** *(18:1-33).*அப்சலோமுடைய யுத்தவீரர் தாவீதின் யுத்தவீரரை பின் தொடர்ந்தனர். தாவீதின் படையினர் மிகவும் ஆயத்தமாகவிருந்து, அப்சலோமின் படையினரை தோற்கடித்து அப்சலோமைக் கொலைசெய்தார்கள். (18:1-18).

*3.* ***மீண்டும் அரசனாதல்****. (19:1-20:26).*உள்ளூர் யுத்தம் இன்னும் முடிவடையவில்லை. தாவீது திரும்பவும் எருசலேமிற்குள் வரும் போது சீமேய என்பவன் (தென் கோத்திரத்தில் ஒருவன்) “திரும்ப வீட்டுக்குபோ” என்று தாவீதுவுக்கு எதிராகக் கோஷமிட்டு குழப்பம் விளைவித்தான்.

யோவாப், தாவீதின் இராணுவ அதிகாரி இலகுவாக சீமேயாவைக் கொலை செய்தான். அப்சலோமால் பாலியல்வல்லுறவுட்குள்படுத்தப்பட்ட தாவீதின் மனைவிமாரை சாகும்வரை தனியாக வீட்டிலடைக்க சொன்னான் தாவீது.

*4. **தாவீதின் ஆட்சி பற்றிய விவரணம்**. (21:1-24:25).*

**கிபியோனியர்கள் பழிவாங்கப்படல்**. (21:1-14). 21:16-22 கோலியாத்தின் சகோதரர்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. **பெலஸ்தீனியருக்கு எதிரான யுத்தம்**.(21:15-22).

**வெற்றி கொண்டபின் தாவீது கர்த்தரைத் துதித்தல்**.(22:1-23:7.) தாவீது வெற்றி கொண்டபிற்பாடு பெற்ற உணர்வுகளின் பாடல்கள். இரண்டாவது பாடல் 23:1-7).
தாவீது தாகமாயிருக்கும் போது 23:15-17 படைவீரர் தங்கள் உயிரை பணயம் வைத்து பெலிஸ்தியரின் பாளயத்துக்குள் போய் தண்ணீர் எடுத்துவந்த மூன்று பேரின் தியாகத்தை உணர்ந்து இது தண்ணியல்ல இரத்தம் எனக் கூறி கர்த்தருக்கு காணிக்கை என்று சொல்லி தரையில் ஊற்றினார்.

**தாவீது குடிசன மதிப்பு செய்தான்.** (24:1-25). இச் செயற்பாடு இராணுவ அதிகாரிகளால்கூட பாவமாக எண்ணப்பட்டது. கர்த்தர் இந்தப் பாவத்தை நியாயம் தீர்த்தார். கர்த்தர் தாவீதிற்கு தண்டனை ஒன்று தெரிவுசெய்வதற்கு சந்தர்ப்பம் கொடுத்தார். கொள்ளை நோயைத் தாவீது தெரிவு செய்தான். கர்த்தர் இந்தத் தண்டனையை எருசலேமிற்கு அப்பால் செய்யவில்லை. தாவீது ஒரு பலிபீடத்தைக் கட்டி அங்கே பலி செலுத்தினான்.

**பகுதி1. தாவீதின் வெற்றிகள் வெற்றிகள் எத்தனை வகைப்படும்? அவைகள் யாவை?**

**(1:1-10:19)**

**2. தாவீதின்வெற்றிகள் 3 வகைப்படும், அவையாவன**

- **இராஜ்ஜிய வெற்றிகள் 1:1-5:25**

அ) எபிரேனில் இருந்து யூதாவை ஆட்சி செய்தல்
ஆ) எருசலேமை ஆட்சி செய்தல்

- **ஆவிக்குரிய வெற்றிகள்1:1-5:25**

  அ) உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டு செல்லல். 1:1-4:12

  ஆ) தாவீதின் உடன்படிக்கையை நிறுவுதல் 7:1-29

- **யுத்தத்தில் வெற்றிகள். 8:1-10:19**

  அ) தாவீது தனது எதிராளிகளை வெற்றி கொள்ளல் 8:1-12

  ஆ) நீதியான ஆட்சி செய்தல் 8:13-9:13

  இ) சீரியாவையும். அம்மோனையும் வெற்றி கொள்ளல் 10:1-19

**பகுதி.2. தாவீதின் பாவச்செயல்கள் யாவை? அவற்றை விளக்குக**

**அ) விபச்சாரப்பாவமும் (11:1-5,) கொலைசெய்த பாவமுமாகும் 11:6-27**

- உரியா பத்சேபாளுடன் தங்குவதற்கு மறுத்தல்11:6-13
- தாவீது உரியாவைக் கொலைசெய்யக் கட்டளையிடல்11:14-25
- தாவீதும் பத்சேபாளும் திருமணம் செய்தல் 11:26, 27

**பகுதி 3. தாவீதிற்கு ஏற்பட்ட தொல்லைகள் யாவை?**

1.தாவீதிற்கு குடும்பத்தில் தொல்லைகள் ஏற்பட்டன, 12:1-13:36

அத்துடன் இராஜ்ஜியத்திலும் தொல்லைகள் ஏற்பட்டன 13:37-24:25

2.குடும்பத்தில் ஏற்பட்ட தொல்லைகள் யாவை?

அ) நாத்தானின் தீர்க்கதரிசனம் 12:1-14

ஆ) தாவீதின் மகன் மரணமடைதல் 12; 1-14

இ) யோவாப்பின் விசுவாசம் 12;15-25

ஈ) தாவீதின் வீட்டில் தகாத உறவு 13;1-20

உ) அம்மோன் கொலை செய்யப்படல் 13;21-36

II. இராஜ்ஜியத்திலும் தொல்லைகள் யாவை? 13:37-24:25

அ) அப்சலோமின் கிளர்ச்சிகள் 13:37-17:29

ஆ) அப்சலோம் கொலை செய்யப்படல் 18:1-33

இ) தாவீது மீண்டும் அரசனாதல் 19:1-20:26


**தாவீதின் வெற்றிகள்.**


| | |
|---|---|
| தாவீது கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற மனிதனாகவிருந்தான்.(1 சாமு.13:14) அதாவது அவனுடைய விருப்பம் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்று தலாகும். தன்னால் தெரிவு செய்யப் பட்ட இஸ்ரவேலர்களுக்கா பலத்த காரியங்களைச் செய்யும் வண்ணமாக தாவீது கர்த்தரால் பயன்படுத்தப்பட்டான். | யூதாவின் ராஜாவாகினார்.( 2:4)<br>இஸ்ரவேலின் ராஜாவாகினார்.(5:3)<br>எருசலேமை வெற்றிகொண்டார்.(57)<br>உடன்படிக்கைப் பெட்டியை மீட்டார்(612)<br>தாவீதின் உடன்படிக்கை (716)<br>பெலஸ்தினியர்களை மேற் கொண்டார்.(8:1)<br>மோவாப்பியரை மேற் கொண்டார்.(8:2)<br>அம்மோனியரை மேற் கொண்டார்(10: 16)<br>சீரியரை மேற் கொண்டார்.(1019) |

**தாவீதிற்று ஏற்பட்ட தொல்லைகள்.**

| **காரணம்** | **விளைவு** |
|---|---|
| விபச்சாரம்(11:4) | பத்சேபாள் குழந்தை பெற்றாள்.(11:5) |
| உரியாவைக் கொலைசெய்தல்.(11:17) | குற்றம் சாட்டப்பட்டான், மனம்திரும்பினான், ஆனாலும் பிள்ளைசெத்தது.(12:10, 13, 19) |
| அம்மேனுடைய தகாத உறவு (13:14) | அம்மோனைகொலை செய்யப்படல் (13:28, 29) |
| சிங்காசனத்தை அப்சலோம் பறித்தெடுத்தல் (16:15, 16) | அப்சலோம் கொலை செய்யப்படல்(18:14, 15) |

| | |
|---|---|
| இலக்கம் பார்த்தல்(24:2) | கொள்ளைநோய்(24:15) |
| கீழ்படியாதவர்களுடைய வாழ்க்கை தொல்லைகள் நிறைந்தவை. | |






2

## உசாத்துணை நூல்கள்.


1. Hayford, J. W., & Thomas Nelson Publishers. 1995. *Hayford's Bible handbook*. Thomas Nelson Publishers: Nashville
2. **HOLMANBIBLEHANDBOOK** *General Editor* **David S. Dockery** *Editorial Team* **Trent C. Butler Christopher L. ChurchLinda L. ScottMarsha A. Ellis SmithJames Emery WhiteHOLMAN BIBLE PUBLISHERSNashville, Tennessee**
3. **ENCYCLOPEDIAOFBIBLE FACTS** *Compiled and edited by* **Mark Water**
4. Thomas Nelson Publishers. (1996). *Nelson's complete book of Bible maps & charts : Old and New Testaments.* "Completely revised and updated comfort print edition"; Includes indexes. (Rev. and updated ed.). Nashville, Tenn.: Thomas Nelson.